Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 17-12-2025
Deposition of witness for : PW 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நந்தபாலன் | வயது | : | 31 |
| தந்தை பெயர் | : | ரவிச்சந்திரன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | டீ கடை வைத்துள்ளேன். |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. என்னுடைய இரண்டாவதுகையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.8** ஆகும்.

3) என்னுடையது. 7.7.2025 அன்று 5.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுகை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. 7.7.2025 அன்று மாலை 4 மணிக்கு மேல் இருக்கும். ஆஜர் எதிரியை போலிசார் MC ரோடு, பாலாஜி நகர் பஸ் ஸ்டாப் அருகே கைது செய்து விசாரித்தபோது நான் உடன் இருந்தேன். நான் கையெழுத்து போட்டேன். கைப்பற்றுகை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் என்னுடையது ஆகும். அது **அ.சா.ஆ.9** ஆகும்.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் இந்த வழக்கு பற்றி என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 7.7.2025 ம் தேதி எதிரியை போலிசார் கைது செய்து விசாரித்தார்கள் என்றும் மாலை 4.15மணியளவில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி அவருடைய தம்பி திருவேங்கடத்தை அடித்த மரரீப்பர் கட்டை மற்றும் தான் போட்டிருந்த சட்டை பேண்டையும் வீட்டின்

பக்கத்தில் உள்ள செல்வராஜ் ஸ்கூல் அருகே உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து போலிசாரிடம் எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல் முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்